## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.

திரு.பொன்வேந்தன், பி.டெக், எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திரு. சலேந்திரன் | அசல் வழக்கு எண். | 65/2015 |
| த/பெ. | - | பொன்னுசாமி | பி.சா. | 1 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

21.01.2026.

**முதல் விசாரணை:**

நான் எனது தரப்பு பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். நான் சொன்னத்தின் பேரில் பிரமாண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டதுதான். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதிலுள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். 09.04.1975 தேதியிட்ட ஆதிலட்சுமி என்பவருக்கு மலையன் என்பவர் எழுதி கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் அசல் **பி.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்டுகிறது. 14.04.1980, 12.07.1982 தேதிகளிட்ட ஆதிலட்சுமி பெயரிலுள்ள தீர்வை இரசீதுகள் மற்றும் 28.03.1982, 05.12.1984, 23.04.1985, 05.05.1986, 04.041987, 26.02.1988, 09.03.1983, 06.03.1990 தேதிகளிட்ட என் பெயரிலுள்ள தீர்வை இரசீதுகள் ( எண்ணிக்கை 8) அசல் **பி.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (**மேற்படி 14.04.1980 மற்றும் 12.07.1982 தேதிகளிட்ட இரசீதுகள் 2 சி மரத்திற்கான இரசீதுகள் என்பதால் வாதி தரப்பில் தெரிவிக்கப்பட்ட ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது**).

வாதி தரப்பின் கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in the presence of the withess read over to the witness, and admitted by him/her to be correct.

PONVENTHAN D
Digitally signed by PONVENTHAN D
Date: 2026.01.21 00:57:32 +0530

District Munsif
Vanur.